දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary — 2784811

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்:.E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ……………………………………

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
"இசுருபாயா" ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

பாடசாலை செயற்பாடுகள் தனியார் பாடசாலைக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. — ED/01/10/05/119

දිනය / திகதி / Date — 2010.04. 23

**சுற்றறிக்கை இல : 2010/16**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்.

## 2010ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை தவணைப் பரீட்சைகளை பாடசாலை மட்டத்தில் நடாத்துதல்

பாடசாலை தவணைப் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட 2009/30 சுற்றறிக்கைக்கமைய பாடசாலை தவணைப் பரீட்சைகளை ஒழுங்குசெய்யும்போது ஏற்பட்ட பிரச்சினைக்குரிய நிலைமைகளின் காரணமாக 2010ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை தவணைப் பரீட்சைகளை பாடசாலைகள் மட்டத்தில் நடாத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. எனவே பாடசாலை தவணைப் பரீட்சைகள் தொடர்பில் வெளியிடப்பட்ட 2009/30 சுற்றறிக்கை ஆலோசனைகளுக்குப் புறம்பாக இச்சுற்றறிக்கையின் ஆலோசனைகளை விஞ்சி பாடசாலை தவணைப் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் அமுலில் இருக்கும் என்பதனால் இதற்குப் பின்னர் இச்சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கமைய செயற்படுதல் வேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

02. இதனடிப்படையில் சகல பாடசாலையும் முதலாம்,இரண்டாம்,மூன்றாம் தவணைகளுக்குரிய தவணைப் பரீட்சைகளை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதோடு தமக்குத் தேவையான வினாத்தாள்களைத் தயாரிக்கும் பணியை பாடசாலை மட்டத்திலேயே மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் வினாத்தாள்கள் உரிய நியமங்களையும் பண்புசார் தரத்தையும் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதனால் இதற்காக முறையான வேலைத்திட்டங்களை பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்த வேண்டும்.

03. எனவே பாடசாலை முகாமைத்துவ அணியின் மேற்பார்வையின் கீழ் தவணைப் பரீட்சைக் குழுவை நியமிப்பதற்கும் அதற்கு அவ்வவ் பாடங்களில் தேர்ச்சி பெற்றுள்ள ஆசிரியர்களை நியமித்து அதனூடாக வினாத்தாள்களைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கவும். இவ்வினாத்தாள்களைத் தயாரிக்கும்போது உரிய வருடத்தில் அவ்வவ் தவணைவரை பூரணப்படுத்த வேண்டிய பாடத்திட்டங்களை தழுவக்கூடியவாறு தயாரிப்பதற்கும் இறுதித் தவணைப் பரீட்சையில் முழு பாடவிதானத்தையும் தழுவக்கூடியவாறு வினாத்தாள்களைத் தயாரிக்கவும் வினாத்தாள் தயாரிப்புக்குழு பொறுப்பாக இருக்கவேண்டும்.

04. அவ்வாறு பரீட்சைக் குழுவினால் தயாரிக்கப்படும் வினாத்தாள்கள் பாடசாலை முகாமைத்துவ அணி போன்று பாட பொறுப்பாளர்களினதும் மேற்பார்வைக்குட்படுத்தியதன் பின்னர் அச்சிட வேண்டும். இப்பணியை வெற்றிகரமாக சரியாக நிறைவேற்றுவதற்காக முன்கூட்டியே பரீட்சைப் பணிகளை ஒழுங்குசெய்வதும் மற்றும் திட்டமிடுவதும் அத்தியவசியம் என்பதனால் இது குறித்து அதிபர்கள் கூடுதலாக கவனம் செலுத்தவேண்டும்.

இரண்டாம் தவணைப் பரீட்சை ஒவ்வொரு ஆண்டினதும் ஜுலை மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவேண்டியதுடன் மூன்றாம் தவணைப் பரீட்சை ஒவ்வொரு ஆண்டிலும் நவம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சகல தவணைப் பரீட்சைகளின் இறுதியிலும் மாணவர்கள் பெறும் புள்ளிகள் அந்த தவணை முடிவடைவதற்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பது மிக முக்கியம் என்பதனால் அது தொடர்பில் சகல ஆசிரியர்களினதும் கவனத்தை ஈர்த்தல் வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

மேலும் க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அப்பரீட்சைக்குத் தயாராக ஒரே சந்தர்ப்பத்தைப் போன்று பாடப் பிரச்சினைகள் தொடர்பாக மீளூட்டல்கள் மற்றும் கலந்துரையாடலுக்குக் கிடைக்கும் இறுதிச் சந்தர்ப்பம் என்பதனால் அதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் க.பொ.த(சா.த) பரீட்சை மாணவர்களுக்காக தவணைப் பரீட்சையை முன்கூட்டியே நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு அறியத்தருகிறேன்.

05. வினாத்தாள்களைத் தயாரிக்க உரிய காகிதாதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அச்சுப் பணிகளுக்கான செலவினங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கு, பாடசாலை மேம்பாட்டுக் கணக்கு ஆகிய கணக்குகளில் ஏதேனும் ஒன்றின் நிதியைப் பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது என்பதையும் அறியத்தருகிறேன். இது எவ்வாறாக இருப்பினும் உரிய கணக்குகளில் போதியளவு நிதி இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் அது தொடர்பாக உறுதிப்படுத்தியதன் பின்னர் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணக் கணக்கிலிருந்து தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள இடமளிக்கப்படுகின்றது.

06. உரிய பாடத்திட்டங்களை தழுவக்கூடியவாறு முறையாக மற்றும் தரமுள்ள வினாத்தாள்களைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்க உரிய வேலைத்திட்டங்களை அமுல்படுத்த அதிபர்களை அறிவுறுத்தவும், அதற்காக மாகாண வலய மற்றும் கோட்ட மட்டத்தில் மேற்பார்வை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்குமாறும் அறியத்தருகிறேன்.

07. இப்பணியின் போது அதிபர்கள் மற்றும் முகாமைத்துவ அணியின் தவணைப் பரீட்சைக் குழுவும் கூடிய பொறுப்புடன் செயற்பட்டு தரமான வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்க உயர்ந்தபட்ச பங்களிப்புகளை வழங்குவீர்களென எதிர்பார்க்கிறேன்.

எம். எம். என். டீ. பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி :

1. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - த.செ இது தொடர்பாக தங்களது கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகளை நடாத்தவும் மேற்பார்வை செய்வதற்காகவும்.